**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No. 728/2024

DEPOSITION OF WITNESS FOR PW-1

| | | |
|---|---|---|
| NAME | : | திரு.ராஜன் |
| Father/ Husband NAME | : | திரு.சண்முகம் |
| VILLAGE | : | நாகர்கோவில் |
| TALUK | : | அகஸ்தீஸ்வரம் |
| CALLING | : | 1ம் மனுதாரர் |
| AGE | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of January 2026.

முதல் விசாரணை :–

நான் இம்மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல் ம.சா.ஆ.2. விபத்து பதிவேடு நகல் ம.சா.ஆ.3. சம்பள ரசீது அசல் ம.சா.ஆ.4 (எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.5. மனுதாரர் பான் கார்டு நகல் ம.சா.ஆ.6. மனுதாரர் வங்கிக்கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.7. மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

<u>2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

எனது வயது, வேலை, வருமானம் காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் Drizzle Bistro Restrant ல் ஸ்டோர் கீப்பராக வேலை பார்த்தேன் என்பதை அதன் உரிமையாளரை அழைத்து விசாரித்தால் தான் அதன் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் தற்போதும் அங்கு தான் வேலை பார்க்கிறேன் என்பதால் எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறிவிட்டது என்றாலும் நான் நல்லமுறையில் வேலை பார்த்துவருகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றான் என்றால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற வாகனம் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் தான் உள்ளது. விபத்து சமயத்தில் எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் மற்றும் வானத்திற்கு காப்பீடும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாகனத்தை ஓட்டிச்சென்ற சாலை அகலமான நேரான ரோடு என்பதால் எதிர்வரும் வாகனம் நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கி எதிரே வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் முழுகாரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் சாலைவிதிகளை கடைப்பிடித்து வாகனத்தை இயக்கினார் என்பதாலும் நான் தான் வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி விபத்தை வரவழைத்துக்கொண்டேன் என்பதாலும் 2,3 எதிர்மனுதாரர்கள் எந்த

இழப்பீடும் தரக்கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் தவறான பாதையில் சென்று விபத்தை ஏற்படுத்தியதால் தான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் அதிகப்படியான இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.